Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.1, 2024, (6-14)

# Teaching Tamil literature using ‘Book Creator’ App

## தமிழ்மொழி இலக்கியத்தை ‘Book Creator’ செயலியின் வழி கற்பித்தல்

Rhina Davaraj
email: rhinadava16@gmail.com

**Published:** 20 April 2024

**To cite this article (APA):** Davaraj, R. (2024). தமிழ்மொழி இலக்கியத்தை ‘Book Creator’ செயலியின் வழி கற்பித்தல்: Teaching Tamil literature using ‘Book Creator’ App. *Journal of Valartamil*, *5*(1), 6–14. https://doi.org/10.37134/jvt.vol5.1.2.2024

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol5.1.2.2024

**Abstract:** This paper is a part of a research that investigates the innovative teaching method for Tamil Literature. Tamil Literature has been teaching in school since the start of Tamil Vernacular Schools. ‘Book Creator is a software that works as a flip book. This paper has introduced and explained the ‘Book Creator’ app and the usage of it. The findings also have discussed some Tamil Literature school syllabus that have inserted in ‘Book Creator’. This innovation is very useful for online based teaching and learning methods for teachers and students.

**Keywords:** Book Creator, Flip book, Tamil Education, Apps, Smart class

**Abstract:** இந்த ஆய்வுக்கட்டுரையில், தமிழ் இலக்கியத்திற்கான புதுமையான கற்பித்தல் முறையை ஆராயும் ஒரு ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது. தமிழ்ப்பள்ளிகள் தொடங்கப்பட்டிருந்திலிருந்தே தமிழ் இலக்கியம் பள்ளியில் கற்பித்து வருகின்றது. உலகமய மாற்றத்திற்கேற்றவாறு தொழில்நுட்பப் பயன்பாடும் கற்றல் கற்பித்தலில் அவசியமாகிறது. அதனால், ‘Book Creator’ எனும், செயலியின் வழி தமிழ் இலக்கியத்தைக் புதுமையாகக் கற்பிக்கமுடியும் என்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின் புத்தாக்கச் சிந்தனையாகும். இந்த ஆய்வுக்கட்டுரையில், ‘Book Creator’ செயலியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் அதன் அனைத்துப் பயன்பாட்டையும் அறிமுகப்படுத்தி விளக்கியுள்ளது. இந்த அணுகுமுறையும் புத்தாக்கமும் ஆசிரியரும் மாணவர்களும் இயங்கலை கற்றல் கற்பித்தலில் தங்களை மேம்படுத்திக்கொள்ள பேருதவியாக அமைகிறது.

**கருச்சொற்கள்:** புத்தக உருவாக்கி, தகவல் விளக்க படம், தமிழ் கற்றல், செயலிகள், புத்தாக்க வகுப்பறை

## முன்னுரை

21 ஆம் நூற்றாண்டுகளில் தொழிநுட்பத்தின் பயன்பாடு நினைத்துப் பாராத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது. இது உலக மக்களின் வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவி வருகின்றது. மனிதன் ஆதிகாலத்தில் வாழ்ந்த முறைக்கும் இப்பொழுது வாழும் முறைக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. இதற்கான காரணம் அறிவியல் முன்னேற்றமே என்று கூறுவதே சிறப்பாகும் (புஷ்பலதா, 2016). தொழில்நுட்பம் இன்று நாம் வாழும் முறையை மாற்றி நம் அன்றாட வாழ்க்கையில் பொதுவானதாகிவிட்டது.

இது கல்வித்துறையில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. தொழில்நுட்பமும் தகவல் தொழில்நுட்பமும், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாடத்தைக் காட்சிபடுத்திக் கற்பித்தலை எளிமையாக்குகிறது. மாணவர்களின் புரிதலும் இதன் மூலம் சுலபமாகிறது. இன்றைய வகுப்புகளில், பயிற்சிக்கும் மதிப்பீடுகளுக்கும் ஒரு கருவியாகத் தொழில்நுட்பம் பயன்படுகிறது. மாணவர்களிடம் கற்றலுக்காகத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் காட்டும்போது, அதை எதிர்காலத்தில் பொழுதுபோக்காக மட்டும் பார்க்காமல் கல்விக்கான கருவியாகவும் கருதுவார்கள். இன்று கற்றலும் கற்பித்தலும் "Smart class" எனப்படும் கணினி வழிக்கல்வி முறைக்கு வந்துள்ளோம். மாணவர்களும் கற்றலைச் சுமையாகக் கருதாமல் செயல்வழி கற்றல், செய்து கற்றல், விளையாட்டின் மூலம் கற்றல் என மகிழ்ச்சிடன் கற்கின்றனர். இதற்குப் பல்வேறு ஊடகங்களை ஆசிரியர்களும் பயன்படுத்தி வருகின்றனர். தொழில்நுட்ப மென்பொருட்களைப் பயன்படுத்தி கற்பித்தலை மேம்படுத்துவதின் மூலம் கற்றலும் கற்பித்தலும் வளர்ச்சியடைகிறது.


தமிழ்மொழியில் இலக்கணம் இலக்கியம் கற்றல் திறன்களைக் கற்பிப்பதற்குப் பல்வேறு மென்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. மாணவர்களுக்கு எளிமையான முறையில் சரியானத் தகவல்களை

Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.1, 2024, (6-14)

வழங்குவதற்கு ஆசிரியர்கள் எடுக்கும் முயற்சிகள் மிகவும் முக்கியமாகும். அவ்வகையில், இலக்கியம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் கூடுதல் முயற்சி எடுப்பது அவசியமாகும். ஏனெனில், இலக்கியம் என்பது வரலாற்றைக் கூறுவதாகும். அதற்குச், சரியான நேரமும் கற்பிக்கும் அணுகுமுறையும் அவசியமாகும். மாணவர்களைக் கவரும் வகையில் இலக்கியக் கற்பித்தல் அமைவது சிறப்பாகும். அதுவே, மாணவர்களை மென்மேலும் இலக்கியம் கற்பிக்கவும் இலக்கியத்தில் சிறக்கவும் வழிவகுக்கும்.


## மென்பொருளின் அறிமுகம்

தமிழ்மொழி இலக்கியத்தைக் கற்பிப்பதற்கு, 'Book Creator' எனும் மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. இம்மென்பொருள், BookCreator எனும் வலைத்தளத்திலிருந்து கிடைக்கப்பெற்றது. இது இணையப் புத்தகம் உருவாக்கும் ஒரு மென்பொருளாகும்.



## மென்பொருளின் சிறப்புத் தன்மைகள்

‘BookCreator’ மென்பொருளில் பலவிதமான சிறப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இது ஒரு இணைய புத்தகத்தை உருவாக்குவதிற்கு மிகச் சிறந்த கருவிகளாக அமைந்து பலன்தருகிறது.





இதில், பலவகையான எழுத்துருக்களை உள்ளிடும் வாய்ப்பு அமைக்கப்பட்டுள்ளது. ஐம்பதுக்கும் மேற்பட்ட எழுத்துருக்களை இணைய




புத்தகத் தயாரிப்பிற்குப் பயன்படுத்தலாம். இதில், ஆங்கில எழுத்துகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்துகளுக்கு அடிப்படையான ஒரே எழுத்துரு வகை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இதை ஒரு குறையாக எண்ணாமல், தமிழ் எழுத்துக்களை வகை வகையான எழுத்துருக்களில் மாற்றியமைத்து இந்த இணையப் புத்தகத்தில் உள்ளீடு செய்வதற்கும் ஒரு வழி உள்ளது.


Fontmeme வலைத்தளத்தில் தமிழ் எழுத்துகளைத் தட்டச்சு செய்து அதை, பல்வேறு எழுத்துருக்களில் மாற்றியமைக்க இயலும். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட எழுத்துருக்கள் வகை உள்ளன. இதில், சொல்லைத் தட்டச்சு செய்தபின், கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை ‘copy’ செய்து அதை ‘BookCreator’ இல் உள்ளீடு எனும் இடத்தில் ‘paste’ செய்தால் உடனே அது ஒரு



Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.1, 2024, (6-14)


படமாக இணைய புத்தகத்தில் அமைந்துவிடும். அதை சிறியதாக்கவும் பெரியதாக்கவும் இயலும். இம்முறையிலே, இணையப் புத்தகத்தில் தமிழ் எழுத்துக்கள் உள்ளிடப்பட்டது.

அடுத்ததாக, இந்த இணையப் புத்தகத்தில் நமது மடிக்கணினி, திறன்பேசியிலுந்தோ படங்களைப் பதிவேற்றம் செய்ய இயலும். மேலும், அந்த மென்பொருளினுள்ளேயும் பல படங்கள் உள்ளன. நமக்கு என்ன




வகை படம் வேண்டும் என்பதை தேடு எனும் இடத்தில் தட்டச்சு செய்தால், அது உடனே அதனுள் கொண்டுள்ளப் படங்களை நமக்குக் காட்டும். பின் தேவையானவற்றைப் புத்தகத்தில் உள்ளிடலாம். அதைத்தொடர்ந்து, இணையத்திலிருந்தும் படங்களைத் தேடி உள்ளிடும் வசதியும் இதில் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இது இணையப் புத்தகத்தில் படங்களை உள்ளிடுவதற்கும் வாய்ப்புத் தருகிறது.

அடுத்ததாகப், படங்களைத் தவிர இலக்கியத் தலைப்பிற்கு ஏற்ற காணொலியையும் ஒலிப்பதிவையையும் இந்தப் புத்தகத்தில் இணைக்கலாம். மாணவர்கள் சுயமாக வாசிக்கவும் இயலும், வேண்டுமெனில் ஒலிப்பதிவாகக் கேட்டுப் பயன்பெறவும் இயலும். அதுமட்டுமின்றி, இதில் மிக முக்கியமாக, இணையப் புத்தகத்தை தயாரிப்போர் தன் சுயக் குரலை அதிலேயே பதிவு செய்து உள்ளிடவும் முடியும். இத்தகைய சிறப்புகள் மாணவர்களை மென்மேலும் கவர்ந்தீர்க்கும் என்பதில் ஐயமில்லை.




மேலும், இணையப் புத்தகத்திற்கான தேவையான கருத்துக்களை தட்டச்சு மட்டும் செவதில்லாமல் அங்கே கொடுக்கப்பட்டுள்ள பல வகை எழுதுகோல்களைப் பயன்படுத்தி அதிலேயே வரையவும் செய்யலாம்.





எழுத்தாணி போன்றும், தூவல் போன்றும், தடிப்பான எழுதுகோல் போன்றும் பல வகையிலான எழுதும் கருவிகள் உள்ளன. அதைப்பயன்படுத்தி, தேவைக்கேற்ப எழுதுகோல்களைப் பயன்படுத்தி இணையப் புத்தகத்தின் உள்ளடக்கத்தையும் அதன் வெளித்தோற்றத்தையும் மெருகேற்ற முடியும்.

அதைத்தொடர்ந்து, இணையப் புத்தகத்தில் புதுப்புது வடிவங்களையும் வழிகாட்டி கோடுகளையும் 'எமோஜி' களையும் 'ஐ88ட்கோன்' களையும் தேர்ந்தெடுத்து அடுக்கலாம். இது, மேலும், புத்தகத்திற்குச் சிறப்பு சேர்க்கிறது. இதில், பல்வேறு வடிவங்கள் கிடைக்கப்பெறுவதால் கருத்துக்களை வெறும் எழுத்துக்களில் மட்டுமின்றி பல்வேறு வடிவங்களைக் கொண்டு வரைப்படமாகக், குறியீடுகளைப் பயன்படுத்தி விள்க்கமளிக்கலாம். இவ்வாறு பலவிதமான புதிய கூறுகளைப் பய்ன்படுத்துவதின்வழி மாணவர்கள் சளிப்புத் தட்டாமல் இணையப் புத்தகத்தைப் படிக்கவோ கேட்வோ செய்வர்.




மேலும், இக்காலக்கட்டத்தில் அதிகமாகப் கணினித் திரைகளைக் காண்பதினால் ஏற்படும் சிக்கலைத் தவிர்க்கலாம். குறுகிய காலத்தில் பாடத்தைப் புரிந்துகொண்டு பிறகு, தேவையிருப்பின் மீண்டும் அப்புத்தகத்தை மாணவர்கள் புரட்டலாம்.

இறுதியாக, இந்த மென்பொருளில் கொடுக்கப்பட்டுள்ள அடுத்த சிறப்புப் பயன்பாடானாது நம் இணைய புத்தகத்தின் வடிவத்தை மாற்றியமைக்கலாம். எடுத்துக்காட்டிற்கு, செங்குத்தாகவோ, சதுர வடிவிலோ மாற்றி நம் தேவைக்கேற்ப வடிவத்தை உள்ளிடலாம். கடிதம் வடிவிலான புத்தகம் மாணவர்களுக்குச் சலிப்புத்தன்மையை ஏற்படுத்தக்கூடும்.




ஆகவே, பெரிய புத்தக வடிவில் இதைப் பயன்படுத்துவது சிறப்பானதாக அமையும் என்பது பரிந்துரைக்கப்படுகிறது.

## கற்பித்தலுக்குப் பயன்படுத்தும் முறை

தமிழ்மொழி கற்பித்தலுக்கு இந்த மென்பொருளானது மிகவும் பயனுள்ளதாக அமையும். இலக்கணமோ இலக்கியமோ கற்பித்தல் திறன்களோ மிகவும் எளிமையான முறையிலும் மாணவர்களைக் கவரும் வகையில் அமைக்கலாம். இந்த மென்பொருளில் தற்பொழுது உறுவாக்கப்பட்டிருப்பது சங்க இலக்கியத்தைபற்றிய அடிப்படை தகவல்களாகும். இதற்கு, முதல் பக்கத்தில் புத்தக அட்டைப் போன்ற வடிவிலான எழுத்துக்கள் உருவாக்கப்பட்டு சங்க இலக்கியம் என எழுதப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, சங்க இலக்கிய நூல்கள் எனப்படும் நூல்களின் வகைகளையும் அவ்வகையில் பகுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நூல்களின் பெயர்களும் வண்ண நிறங்களில் உள்ளிடப்பட்டுள்ளன. இப்புத்தகஹ்தின் அடுத்த பக்கத்தை திருப்ப வேண்டிய அவசியமில்லை குற்ப்பிட நேரத்தை அதில் உள்ளிட்டால் சுயமாகப் பக்கங்கள் திருப்பப்படும். இது, மாணவர்களை மேலும் எளிமையாக்குகிறது. இவ்வாறே அடிப்படையான இலக்கியத்தைக் கற்பிப்பதற்கு இந்த இணையப் புத்தகம் பயன்படுத்தப்பட்டது.

## முடிவுரை

தமிழ்மொழி கற்பித்தலுக்கு தொழில்நட்பத்தின் பயன்பாடு மிகவும் அவசியமாகும். பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தப்படும்



தொழில்நுட்பத்தை இதுபோன்ற சிறந்த முறையில் பயன்படுத்தலாம். கர்இத்தலில் புதுப்புது அணுகுமுறைகளைப் பயன்படுத்துவது சிறப்பாகும். என்றுமே ஒரே வகையிலான அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதில் மாணவர்களுக்கு ஈடுபாடு இருக்காது. ஒருவிதமான சலிப்புத் தன்மையை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, இது போன்ற புதிய மென்பொருட்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதின்வழி அவர்களின் கற்றல் திறன் மேம்படுத்துவதோடு அவர்களின் சிந்தனைத் திறனும் மேம்படும். ஒரு புத்தாக்கச் சிந்தனையும் அவர்கள் எழும்பும் என்பதில் ஐயமில்லை. எதிர்கால ஆசிரியர்களும் இதுப்போன்ற புத்தாக்கத்தைப் பயன்படுத்தி கற்பித்தலை மேம்படுத்தலாம். ஊருவாக்கப்பட்ட புத்தகம் கீழ்கண்ட இணைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி இந்த இணையப் புத்தகத்தை வாசிக்கலாம்.

இணையப் புத்தகம்

## துணைநூற்பட்டியல்


(2021). Retrieved from Book Creator: https://bookcreator.com/

Ghasempour, Z., Bakar, N., & Jahanshahloo, G. R. (n.d.). Innovation in Teaching and Learning through Problem Posing Tasks and Metacognitive Strategies. *University of Bahrain*(01). Retrieved from http://journals.uob.edu.bh/handle/123456789/3186

Madhu. (2018, june 6). *ExamsDaily Tamil*. Retrieved from எட்டுத்தொகை நூல்கள்: https://tamil.examsdaily.in/ettu-dhogai-nulgal

Prasath. (2020, August 10). *Digitalsubject*. Retrieved from https://www.digitalsubject.in/2020/08/blog-post_10.html

Puteh, F. (n.d.). Retrieved from Creativity and Innovation in Teaching and Learning, Supervision and Assessment: https://people.utm.my/fatima/innovation-and-creativity-in-teaching-and-learning-approach/

*இயற்றமிழ்*. (n.d.). Retrieved from தமிழ் இலக்கியம்: https://ilakkiyam.com/sangailakkiyam

கலைவாணி, த. (n.d.). சங்க இலக்கியம் திறன் அறிதல் ததர்வ. *சங்க இலக்கியம்*. Retrieved from http://www.sangailakkiyam.com/g3v.php?id=190

சீ.புஸ்பலதா. (2016). அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்படும் நன்மை தீமைகள். கிம். மோ உயர்நிலைப் பள்ளி.

ரீனா.தே, (2021). *Book creator*. Retrieved from சங்க இலக்கியம்: https://app.bookcreator.com/library/-Mb-rUtD3OSoG9fX3M63/pqDMLG3FL4bFK7Gcfx74Tv9PRvC3/X42yYFeXRFSMhiJlN8ongQ/wptUtkqjQd-1t9wt7WgdJw

பேரா.கு.வெ.பாலசுப்பிரமணியன். (n.d.). *தமிழ் இணையக் கல்விக்கழகம் - TAMIL VIRTUAL ACADEMY*. Retrieved from எட்டுத்தொகை நூல்கள் I: http://www.tamilvu.org/ta/courses-degree-c031-c0311-html-c03116l2-17126